**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.42/2025 - PW-8**

| | |
|---|---|
| Name | திரு.பாண்டியன் |
| Husband/Father Name | சேகர் |
| Village /Area | கீழாந்தூர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | விவசாயம் |
| Age | 39 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.10.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள் ஊரை சேர்ந்த மகேஷ் என்பவரின் பிரேதத்தை விசாரணை செய்ய என்னிடம் சாட்சியாக இருக்க வேண்டி போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். ஆஜர் எதிரியை தெரியும் அவர் எங்கள் ஊர்க்காரர் ஆவார். என்னுடன் குமார் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டார். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

31.03.2021 ம் தேதி அரக்கோணம் நகர காவல் ஆய்வாளரிடம் தட்சணமூர்த்தியை நானும் குமாரும் அடையாளம் காட்டினோம் அப்போது

அவரை போலீசார் கைது செய்து அவரிடம் ஒப்புதல் வாக்குமுலம் பெற்று அப்போது அவரை அழைத்து கொண்டு சம்பவ இடம் சென்று விசாரித்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் குமாரும் கையொப்பம் இட்டுவிட்டு தற்போது அவர் எங்கள் ஊர்காரர் என்பதால் அவருக்கு பவ்வியப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என் முன்னிலையிலும் குமார் முன்னிலையிலும் தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் என்னுடன் சாட்சியாக குமார் என்பவரும் கையொப்பம் செய்தார் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தட்சணமூர்த்தி எங்கள் ஊர் காரர் என்பதால் அவருக்கு பவ்வியபட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u> இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.07 16:55:44 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.